# அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 ஆகஸ்ட்

மலர்:46 இதழ்:8

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.சீனிவாசன்

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் லில்லிபுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178

முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளடக்கம்...


1. ஓய்வூதியம் திட்டத்திற்கான குழுவின் அறிக்கை அரசு ஊழியர், மற்றும் ஆசிரியர்களுக்கு இனிப்பான அறிக்கையாகுமா?
   தலையங்கம்........4
2. சமூகநீதி அரசின், கொத்தடிமை கூலி நியமனங்கள். சமரசமற்ற போராட்டங்களை முன்னெடுப்போம்.
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து........5
3. இந்தியர்களின் தலையில் மேலும் கடன் சுமை! வெளிநாட்டு கடனில் புதிய சாதனை!........9
4. தோழர் இரா.சீனிவாசன் அவர்களுக்கு அஞ்சலி........10
5. 27.07.2025 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்........11
6. மார்க்ஸ்சுக்காகவேவாழ்ந்த ஏங்கெல்ஸ்........14
7. 28.7.2025 அன்று Online ல் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்........15
8. AISGEF Cultural Meeting........16
9. 08.08.2025 - அனைத்து அலுவலகங்கள் முன்று ஆர்பாட்டம்........17
10. இரங்கல் செய்தி........18
11. தோழர் சு.சிவக்குமார் அவர்களுக்கு அஞ்சலி........19
12. ஜூலை 9-அகில இந்திய வேலை நிறுத்த போராட்டம்........20
13. விருதுநகர் மாவட்ட காவல்துறையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்........24
14. தோழர்.ஆர்.எம்.எஸ் அவர்களின் நினைவஞ்சலிக்கூட்டம்........27
15. தலைமைப் பண்புகள்........28
16. அரசாணை........30
17. வெ.வசந்தி தேவி முன்னோடித் துணைவேந்தர்........33
18. டி.எல்... இணையிலா ஈரெழுத்துச் சொல்........34

# ஓய்வூதியம் திட்டத்திற்கான குழுவின் அறிக்கை அரசு ஊழியர், மற்றும் ஆசிரியர்களுக்கு இனிப்பான அறிக்கையாகுமா?

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டிலும் ஜாக்டோ ஜியோ மாநில மாநாட்டிலும் கலந்து கொண்ட போதும், பலசமயங்களில் நேரடியாக சந்தித்த போதும் நமது கோரிக்கைகள் சம்மந்தமாக பல்வேறு வடிவங்களில் வாக்குறுதியளித்து 4 ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில்; முன் வைத்த கோரிக்கைகளில் பிரதான கோரிக்கைகளான அரசு துறைகளில் காலியாக உள்ள 4 இலட்சம் பணியிடங்கள் நிரப்புதல், சத்துணவு, அங்கன்வாடி, MRB செவிலியர்கள் மற்றும் ஊர்புற நூலகர்கள் உள்ளிட்ட பிற அலுவலர்களை முறையான காலமுறை ஊதியத்தில் ஈர்த்தல், சாலைபணியாளர்களின் 41 மாத கால பணி நீக்க காலத்தினை முறைப்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கை நிறை வேற்ற வேண்டிய காலகட்டத்தின் இறுதிக்கு ஆட்சியாளர்கள் வந்துள்ள நிலையில்; அரசு ஊழியர், ஆசிரியர்களின் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருக்க கூடிய கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக 04.02.2025 அன்று தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண் 271 இல் பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வ+திய திட்டம் ஆகிய மூன்றையும் ஆராய்ந்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப, Madras school & Economics முன்னால் இயக்குநர் டாக்டர்.கே.ஆர்.சண்முகம், நிதித்துறை துணைச்செயலாளர் திரு.பிரத்திக் தயாள் இ.ஆ.ப ஆகியோர் கொண்ட குழு 9 மாதத்திற்குள் தங்களுடைய அறிக்கையை சமர்பிக்கும் என தமிழக அரசு செய்தி வெளியானது. இச்செய்தி அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பெரும் அதிர்ச்சியாக அமைந்தது.

ஆகவே, ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் 25.02.2025 ந் தேதி மாவட்ட தலைநகரில் மறியல் போராட்டம் நடத்திட திட்டமிடப்பட்டது. இச்சூழலில் போரட்டத்திற்கு முன்தினம் 24.02.2025 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாண்புமிகு நிதி(ம) சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு மற்றும் மாண்புமிகு பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை எந்த நம்பிக்கையையும் தராத சூழலில் மறியல் போராட்டத்திற்கு தடைகோரிய பொதுநல வழக்கின் தீர்ப்பின் காரணமாக 25.02.2025 அன்று தற்செயல் விடுப்பு எடுத்து மாவட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் நடத்துவது என பேச்சுவார்த்தையின் முடிவுக்கு கட்டுப்படாமல் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழகம் முழுவம் நடைபெற்ற எழுச்சியான போராட்டம் மற்றும் 23.03.2025 அன்று மாவட்ட தலைநகர் உண்ணாவிரத போராட்டம் மற்றும் 22.04.2025 அன்று மாவட்ட தலைநகரில் நடைபெற்ற பேரணி ஆகிய தொடர்ச்சியான போராட்டங்கள் தமிழக அரசுக்கு ஒரு எச்சரிக்கை மணியாக அமைந்தது. எனவே வேறு வழியின்றி 28.04.2025 ந் தேதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண் 110 இன் கீழ் அறிவித்த 9 அறிவிப்புகளில் மேற்படி குழுவிற்கான கால அவகாசத்தை குறைத்து செப்டம்பர் 30 க்கு முன் சமர்பித்திட அறிவுறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்;டது.

செப்டம்பர் மாதம் ஓய்வ+தியம் தொடர்பான குழுவின் அறிக்கை அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு இனிப்பான அறிக்கையாக அமையும் என ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இச்சூழலில் பிற கோரிக்கைகளையும்; தமிழக அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

– ஆசிரியர்

# சமூகநீதி அரசின், கொத்தடிமை கூலி நியமனங்கள். சமரசமற்ற போராட்டங்களை முன்னெடுப்போம்.

கடந்த சட்டமன்றத்தேர்தலின் போது மாநில அரசு மக்களிடமும் அரசு ஊழியர், ஆசிரியாகளிடமும் மிகப்பெரிய நம்பிக்கையை அளித்தது. மிகுந்த எதிர்பார்ப்புடன் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், மாணவர்கள் இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் பெருவாரியான அதரவை இந்த அரசுக்கு அளித்தார்கள்.

**மத்திய அரசும், மாநில அரசும் ஒப்பீடு:**

இந்த அரசுக்கு மக்கள் மற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அளித்த ஆதரவுக்கு மற்றொரு பிரதான காரணம் மத்திய அரசு செயல்படுத்திவரும் மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிரான வாக்குறுதிகளை அளித்தது மட்டுமல்ல, எதிர் கருத்துக்களையும், எதிர் இயக்கங்களையும் முன்னெடுத்தது. மத்திய அரசின் முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கைகளும், அதனால் மக்களின் வாழ்வாதாரங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக 2016ல் பண மதிப்பிழப்பு காரணமாக ரூ.1,000 மற்றும் 500 நோட்டுகள் செல்லாது என அறிவித்ததால் மக்கள் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். இதற்கு மத்திய அரசு சொன்ன கருப்பு பணத்தை ஒழிக்க என சொன்ன காரணமும் நிறைவேறவில்லை. ஆனால், அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரம் புரட்டிப்போடப்பட்டது. இதற்கு நிவாரணமாக அனைவரும் வங்கிகளில் கணக்கு துவக்கிட வழிகாட்டப்பட்டது. ஆனால், கையிருப்பு இல்லாமல் ஏழைகளின் கைகளிலிருந்து 21,000 கோடி ரூபாய்களை கொள்ளையடித்தது. விவசாயிகளை கொத்தடிமைகளாக மாற்ற வேளாண் சட்டங்களை அமுல்படுத்த முற்பட்ட போது 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரை தியாகம் செய்து ஒரு வருடகாலம் போராடி தங்கள் உரிமைகளை வென்ா;றடுத்தா்h;கள்;. ஆண்டிற்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு என வாக்குறுதி அளித்த மத்திய அரசு மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் பெருமுதலாளிகளுக்கு அடிமாட்டு விலைக்கு தாரைவார்த்தது. உலக பணக்கார வரிசையில் முன்னனியில் உள்ள பெரு முதலாளிகளுக்கு கடந்த ஏழு ஆண்டுகளில் சுமார் 21 லட்சம் கோடிகளை Stimulate Packageஆக வாரி வழங்கியது.

இவ்வாறு ஒட்டுமொத்தமாக மக்களை மறந்த மத்திய அரசுக்கு மாற்றாக தமிழக அரசு அமையும் என்ற நம்பிக்கையோடு வாக்களித்த மக்கள் மற்றும் இளைஞர்கள், மாணவர்கள் இன்று ஏமாந்த நிலையோடு நம்பிக்கையிழந்து காணப்படுகிறார்கள்.

ஆனால், மாநில அரசு ஆட்சிக்கு வந்தவுடன் மக்களின் அடிப்;படை வாழ்வாதார ஆய்வு செய்து அதற்கேற்றவாறு நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன், மகளிர் உரிமைத்தொகை

போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் மாணவ, மாணவிகளுக்கான உதவித்தொகை ரூ.1,000/- கல்லூரிக்கனவு, உயர்வுக்குப்படி உள்ளிட்ட கல்வி சார்ந்த திட்டங்களின் மூலம் மாணவர்களின் கல்விக்கு முழு முயற்சி எடுத்துவருவது வரவேற்கத்தக்கது. ஆனால், படித்துமுடித்த இளைஞர்களின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது.

**வேலைவாய்ப்பு:**

இன்றைய நிலவரப்படி அரசுப்பணியில் 4,49,569 ஊழியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ளன. இதனால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் என கடும் வேலைப்பளுவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் மக்களின் நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதமும், சுணக்கமும் ஏற்பட்டுள்ளது என்பதை அரசு உணர மறுக்கிறது. வேலைவாய்ப்பு தேடி காத்திருக்கும் படித்த இளைஞர்கள்; சுமார் ஒரு கோடி. இவர்களின் எதிர்காலத்திற்கு எந்தவிதத்திலும் அரசு விடியலைத்தரவில்லை. மாறாக 2025 ஆம் ஆண்டு 10,026 இடங்களுக்கான தேர்வு மட்டுமே நடத்தப்படுமென TNPSC அறிவித்துள்ளது. இதுவே கடந்த ஆண்டு (2024) 9,883 தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால், ஏற்கனவே, காலியாகவுள்ள பணியிடங்கள் 5 லட்சத்திற்கும் மேலாக உள்ள நிலையில், ஒவ்வொரு மாதமும் ஆயிறக்கணக்கான ஊழியர்கள் பணி ஓய்வு பெற்றுவருகிறார்கள். உதாரணமாக கடந்த மே மாதம் மட்டும் 8,144 பேர் ஓய்வுபெற்றனர். ஒரு வருடத்தில் இலட்சக்கணக்கில் பணி ஓய்வு நடைபெறும் நிலையில் அரசுப்பணிக்கான தேர்வு என்பது ஆயிறக்கணக்கில் நடைபெறுவது அரசு இயந்திரத்தை சுருக்கி, மக்களுக்கு அரசு நிர்வாகத்தின் மீது நம்பிக்கையற்ற தன்மையை ஏற்படுத்தி வருகிறது.

**இளைஞர்களின் கனவுகள்:**

கல்லூரிக்கனவுகள், உயர்வுக்குப்படி உள்ளிட்ட அரசின் திட்டங்களால் இளைஞர்களின் கல்லூரிப்படிப்பு சாத்தியமாகியுள்ளது. ஆனால் அதற்குப்பிறகான வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால வாழ்க்கை மிகப்பெரிய கேள்விக்குறியாகியுள்ளது. இளைஞர்களின் வாழ்க்கையை உத்தரவாதப்படுத்த அரசுப்பணி, தனியார் நிறுவனங்களில் நிரந்தரப்பணி அல்லது சுய தொழில் என மூன்று வழிகள் உள்ளது. ஆனால், அரசுப்பணிக்கு மேற்கண்ட பாராவில் கூறியுள்ளது போல சொற்ப எண்ணிக்கையில் தேர்வு நடைபெறுகிறது. தனியார் துறையில் நிரந்தரமற்ற பணி நியமனங்களும், சொற்ப ஊதியங்களும், கார்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கத்தில் சுய தொழிலுக்கான அரசுக்கடன்களும், அதனோடு இளைஞர்களின் கனவுகளும் கானல் நீராகி வருகிறது. இதில் இளைஞர்களுக்கான விடியலும், சமூக நீதியும் எங்கிருந்து கிடைக்கும் என்பதே இலட்சக்கணக்கான இளைஞர்களின் கேள்வியாக உள்ளது.

**கொத்தடிமை கூலி நியமனங்கள்:**

தமிழக அரசு தன்னை சமூக நீதி அரசு என்றும், விடியல் அரசு என்றும் அறிவித்து வருகிறது. அதைத்தான் மக்களும், இளைஞர்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இவை வெறும் வார்த்தைகளால் மட்டுமே அறிவிப்புகளாக வந்துகொண்டிருக்கிறது. ஒரு தனி மனிதன் சமூகத்தில் சரிசமமாக நடத்தப்பட வேண்டுமென்றால்,

பொருளாதாரத்தில் அவன் உயர வேண்டியுள்ளது. அதற்கு அரசுப்பணி ஒரு நிரந்தர விடியலாக இருக்குமென கனவு காண்கிறார்கள். ஆனால், சமூக நீதி அரசு என சொல்லிக்கொள்ளும் தமிழக அரசு சமீப காலங்களாக அரசின் காலியிடங்களை கொத்தடிமை கூலி முறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் என மிக மோசமான பணி நியமங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

தேர்தல் காலத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொகுப்பூதிய முறைகளை ஒழித்து சத்துணவு ஊழியர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள், ஊர்புற நூலகர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், அனைவரையும் பணி நிரந்தரம் செய்வோம் என வாக்குறுதியளித்த தமிழக அரசு அதற்கு நேர்மாறாக, நிலஅளவைத்துறையில் அரசாணை எண்.297ன்படி 707 நிலையான ஊதிய விகிதத்தில் இருந்த Field Assistant பதவிகளை தற்காலிக ஊதியத்தில் நியமனங்கள் தற்போது அரசாணை எண். 420 ன்படி மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான நல்ல மருத்துவத்தை அளிக்க வேண்டிய மருத்துவத்துறையில் Staff Nurse, Pharmachist, Lab Technician உள்ளிட்ட காலியாகவுள்ள சுமார் 4,000 நிலையான பணியிடங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் District Health Society மூலமாக தற்போது 11 மாத Contract ல் நியமித்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**துறைகள் கையகப்படுத்தப்படுகிறது:**

பட்டுவளர்ச்சித் துறையின் தேவைக்காக தாளவாடி, ஒசூர், குன்னூர், ஊத்தங்கரை, கொள்ளட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட காடுகளை / தோட்டங்களை அரசிடம் கொடுத்துவிட துறை முடிவெடுத்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் ஒவ்வொரு ஆண்டும் புதியதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொகுப்பூதியத்தில் அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இது அரசு இத்துறையை இழுத்து மூடும் முடிவாகும்.

**40 வருட கோரிக்கைகள் மீண்டும் முதலிலிருந்து...**

இந்த தேசத்தில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் பசியோடு செல்லக்கூடாது என்ற நோக்கத்தோடு மதிய உணவுத்திட்டத்தை முன்னால் முதலமைச்சர் மாண்புமிகு காமராஜர் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது அன்றை அரசு அதிகாரிகள் இதனால் அரசுக்கு மிகப்பெரிய நிதிச்சுமை ஏற்படும் எனவும், அரசின் கஜானாவில் நிதியில்லை என கூறியபோது, இத்திட்டத்திற்காக மக்களிடம் மன்றாடுவேன் என்று கூறினார். எந்தக்காலத்திலும் அரசு இயந்திரம் ஆட்சியாளர்களின் மக்கள் நல, ஊழியர் நலத்திட்டங்களை ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால், ஆட்சியாளர்களின் உறுதியான நிலைபாடே பல்வேறு நலத்திட்டங்களுக்கு காரணமாக அமைந்திருக்கிறது. அதன்பிறகு அத்திட்டம் சத்துணவுத்திட்டமாக உருமாறி இன்று தேசத்திற்கே முன்னுதாரணமாக தமிழ்நாடு திகழ்கிறது.

கல்வியில் கடைக்கோடியில் இருந்த தமிழ்நாடு இன்று இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. NEET, பொறியியல், என எந்த துறையாக இருந்தாலும் தேசத்தில் முன்னனி மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. வாழ்க்கையில் மிக பின்னடைவில் இருந்த மக்கள் இன்று கல்வியில், பொருளாதாரத்தில் முன்னேறி

வந்துள்ளார்கள் என்றால், அதற்கு முழுமுதற் காரணம் சத்துணவுத்திட்டமும், அதில் பணிபுரியும் சத்துணவு ஊழியர்களாகும். ஆனால் இத்திட்டத்திற்காக தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்ட சத்துணவு ஊழியர்கள் காலமுறை ஊதியம் கேட்டு 40 வருடகாலமாக பல கட்டப்போராட்டங்களை நடத்தி நீண்ட நெடிய நடவடிக்கைகளுக்குப் பிறகு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு, அதை முறையான காலமுறை ஊதியமாக வழங்கிட வேண்டும் என்று போராடி வரும் நிலையில்; அரசாணை எண். 33ன்படி மீண்டும் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்திட அரசின் முடிவானது அவர்களின் கோரிக்கைகளை கொச்சைப்படுத்தும்விதமாகவும், மீண்டும் பின்னுக்குத்தள்ளும் நடவடிக்கையாகும்.

**அந்திமக்கால நம்பிக்கை ஓய்வுதியம்:**

பழைய பயனளிப்பு ஓய்வூதியம் என்பது ஊழியர்களிடையே மிகப்பெரிய கனவாகவும், கானல் நீராகவும் இருந்த நிலையில் 2021 தேர்தல் காலத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், புதிய ஓய்வூதியம் ரத்து செய்யப்பட்டு பழைய ஓய்வூதியம் வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது, ஊழியர்கள் நெஞ்சில் பாலை வார்த்தது. 1988 ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும் என அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறினார். அளித்த வாக்குறுதியை அமுல்படுத்தினார். அதே போல இன்றைய முதல்வர் அவர்களும் பழைய பயனளிப்பு ஓய்வூதியம் அமுல்படுத்துவார் என எதிர்பார்த்திருந்த போது ஓய்வூதியக்குழு அமைக்கப்பட்டு அதன் முடிவு 30.09.2025 ல் பெறப்பட்டு அமுல்படுத்தப்படும் என அறிவித்துள்ளது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஏமாற்றத்தை அளித்துள்ளது. நமது அருகே உள்ள மாநிலங்கள் Guarented Pension Scheme, Assured pension scheme என்றும் மத்திய அரசு Unified Pension Scheme என அறிவித்துள்ள நிலையில், தங்கள் மாநில ஊழியர்களுக்கு நலன்பயக்கும் வகையில் மேற்கு வங்கத்தில் இன்றுவரை எவ்வித மாற்றமுமில்லாமல் பழைய பயனளிப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டாண்டுகளாக சட்டிஸ்கர், ஜார்கண்ட், ராஜஸ்தான், இமாச்சலபிரதேசம் போன்ற மாநிலங்கள் பயனளிப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

ஆனால், மத்திய அரசின் NEET, ஒரே நாடு ஒரே தேர்தல், மின்சார மசோதா, பொது சிவில் சட்டம், புதிய கல்விக்கொள்கை உள்ளிட்ட மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிர் குரல்கொடுக்கும் மாநிலமாக தமிழ்நாடு எல்லா மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக திகழ்ந்துகொண்டிருப்பது உண்மையென்றால் மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்திற்கு மாற்றாக பழைய பயனளிப்பு ஓய்வூதியத்திட்டத்தை அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு பென்சன் திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம், அல்லது வேறு ஏதாவது ஒரு பெயரில் அறிவித்தாலும் அது பயனளிப்பு ஓய்வுதியத்திட்டமாக இருக்காது. அவ்வாறு நடந்தால்; மத்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும். அரசு ஊழியர்களின் நம்பிக்கையை இழக்கும். போராட்டக்களம் தயாராகும். ●

கட்டுரை

# இந்தியர்களின் தலையில் மேலும் கடன் சுமை! வெளிநாட்டு கடனில் புதிய சாதனை!

**- நன்மாறன்**

இந்தியாவின் வெளிநாட்டு கடன் என்பது அரசாங்கம் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது தனியார் கடன் வழங்குபவர்களிடமிருந்து வாங்கிய கடன் மற்றும் உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களும் வெளிநாட்டுக் கடனில் அடங்கும். கடந்த ஆண்டில் இந்தியாவின் வெளிநாட்டு கடன் அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 446.2 பில்லியன் டாலராக இருந்தது.

உலக வங்கியின் சர்வதேச கடன் அறிக்கை 2024 இன் படி, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 646.8 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இது 2010 இல் $290 பில்லியனில் இருந்து டிசம்பர் 2023 இறுதியில் $646 பில்லியனாக உயர்ந்துள்ளது. இந்த மொத்தக் கடனில் 77% நீண்ட காலக் கடனாகவும், 23% குறுகிய கால இயல்புடையதாகவும் அறிக்கை கூறுகிறது. இந்தியாவின் வெளிநாட்டுக் கடனில் பெரும்பகுதி, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு, உலக வங்கி போன்ற பலதரப்பு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளது. இந்தியாவின் மொத்த நிலுவைத் தொகையில் உலக வங்கியின் பங்கு மட்டும் 11% ஆகும்.

இந்தியாவின் மொத்த வெளிநாட்டு கடன் 2025 மார்ச் இறுதியில் 73,630 கோடி டாலராக அதிகரித்து புதிய சாதனை படைத்துள்ளது மோடி சாவர்க்கர். இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. கடந்த 2023-24 ஆம் நிதியாண்டு இறுதியில் 66,880 கோடி டாலராக இருந்த நாட்டின் அந்நிய கடன் அதே நாளில் 10% உயர்ந்து 73,630 கோடி டாலராகியுள்ளது.

**கடன் அதிகரிப்பதற்கான காரணங்கள்**

நாணய சந்தைகளில் சில ஏற்ற இறக்கங்கள் காணப்பட்ட ஓராண்டில் அமெரிக்க டாலரின் மதிப்பு ரூபாய் மற்றும் பிற நாணயங்களுக்கு எதிராக உயர்ந்ததால் ஏற்பட்ட 'மதிப்பீட்டு விளைவு' 530 கோடி டாலராக இருந்தது. இந்த மதிப்பீட்டு விளைவை நீக்கினால் வெளிநாட்டு கடன் 6,750 கோடி டாலருக்கு பதிலாக 7,290 கோடி டாலராக உயர்ந்திருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) வெளிநாட்டு கடன் விகிதம் 2024- 25 ஆம் ஆண்டு நிதியாண்டு இறுதியில் 19.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது முந்தைய நிதியாண்டின் இறுதியில் 18.5 சதவீதமாக இருந்தது.

மொத்த கடனில் நிதி சாரா நிறுவனங்களின் கடன்கள் 26,170 கோடி டாலர். ஒன்றிய அரசின் கடன்கள் 16,840 கோடி டாலர், மத்திய வங்கியைத் தவிர வைப்புத் தொகை பெறும் பிற நிறுவனங்களின் கடன்கள் 20, 210 கோடி டாலர் ஆகியவை அடங்கும்.

2025 மார்ச் இறுதியில் நீண்ட கால கடன் (ஓராண்டுக்கு மேல் முதிர்வு காலம் கொண்டவை) 60,190 கோடி டாலராக

இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 6, 060 கோடி டாலர் அதிகம். மொத்த வெளிநாட்டு கடனில் குறிய கால கடனின் (ஒரு வருடம் வரை முதிர்வு காலம் கொண்டவை) பங்கு 2025 மார்ச் இறுதியில் 18.3 சதவீதமாக குறைந்துள்ளது. இது முந்தைய ஆண்டு 19.1 சதவீதமாக இருந்தது.

ஆனால் குறுகிய கால கடனின் அந்நிய செலாவணி கையிருப்பு விகிதம் 2025 நிதியாண்டில் 20.1% உயர்ந்துள்ளது. இது 2024 மாரச் இறுதியில் 19.7 சதவீதமாக இருந்தது.

**அந்நிய நாயணங்களின் பங்கு**

வெளி நாட்டு கடனில் டாலரின் பங்கு 54.2% உள்ளது. அதைத் தொடர்ந்து இந்திய ரூபாய் (31.1%)ஜப்பானிய யென் 6.2% எஸ்டிஆர் 4.6%, யூரோ 3.2 சதவீதம் ஆகியவை உள்ளன.

கடன்களின் பங்கு 34 சதவீதமாகவும் நாணய மற்றும் வைப்புத் தொகையின் பங்கு 22.8 சதவீதமாக உள்ளது. வணிக கடன் மற்றும் முன் பணம் 17.8%, கடன் பத்திரங்கள் 17.7% ஆகியவை உள்ளன என்று ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் அரசாங்கக் கடனுக்கும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் (GDP) இடையிலான விகிதமாகும். இந்தியாவின் கடன் விகிதம் 56.7% ஆக உள்ளது.

கடனை நிலையான முறையில் பயன்படுத்தவும், உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்நிய செலாவணி கையிருப்பை பலப்படுத்தவும் இந்தியா கவனம் செலுத்த வேண்டும். இது எதிர்காலத்தில் வெளிநாட்டுக்கடன் சார்ந்த அபாயங்களைக் குறைப்பதற்கு உதவும். ●

## தோழர் இரா.சீனிவாசன் அவர்களுக்கு அஞ்சலி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர்.இரா.சீனிவாசன் அவர்களின் இறுதி நிகழ்வு கடந்த 13.06.2025 அன்று சென்னை பள்ளிக்கரணையில் நடைபெற்றது.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். ஸ்ரீகுமார், மாநில மையத்தின் சார்பாக பொதுச்செயலாளர்.தோழர். மு.சீனிவாசன், மாநிலப் பொருளாளர் தோழர். சா.டேனியல்ஜெயசிங், தோழர். வே.விஜயகுமரன், முன்னாள் மாநிலத் தலைவர் கே ராஜ்குமார், முன்னாள் மாநில துணைத் தலைவர் தோழர் ஜெயச்சந்திரன் மற்றும் வடசென்னை, தென்சென்னை, கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகை உள்ளிட்ட பல்வேறு மாவட்ட, வட்ட நிர்வாகிகள், முன்னனி ஊழியர்கள் கலந்துகொண்டனர். தோழரின் இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான தோழர்கள் பங்கேற்றனர். ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**

சுற்றறிக்கை எண்:13/2025

நாள்: 28.07.2025

## 27.07.2025 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

அன்பார்ந்த தோழர்களுக்கு வணக்கம்,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் தஞ்சாவூரில் 27.07.2025 அன்று மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

**கொடியேற்றம்:**

முதல் நிகழ்வாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை பொதுச்செயலாளர் தோழர்.மு.சீனிவாசன் அவர்களும் ஏற்றி வைத்தனர். அதன்பிறகு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மாநில செயற்குழு துவங்கியது.

**அஞ்சலித்தீர்மானம்:**

பொதுவுடமைப் போராளியும், கேரளா முன்னாள் முதல்வருமான தோழர்.வி.எஸ்.அச்சுதானந்தன் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் தோழர்.இரா.சீனிவாசன் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் மாவட்டத்தலைவர் தோழர்.சந்திரசேகரன்நாயர் உள்ளிட்ட தோழர்களுக்கு மாநில செயற்குழுவில் ஆழ்ந்த அஞ்சலி செலுத்தப்பட்டது.

**வரவேற்புரை:**

மாநில செயற்குழுக் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று தஞ்சாவூர் மாவட்டச்செயலாளர் தோழர்.இரா.இரமேஷ் வரவேற்று பேசினார்.

**பங்கேற்பு:**

மாநில செயலாளர் தோழர்.இ.மைக்கேல் லில்லி புஷ்பம் அவர்கள் உடல்நிலை சரியில்லாததால் பங்கேற்க இயலவில்லை. ஏனைய அனைத்து மாநில நிர்வாகிகளும் பங்கேற்றனர். வேலூர், திருப்பத்தூர் மற்றும் அரியலூர் ஆகிய 3 மாவட்டங்களை தவிர 36 மாவட்டங்கள் பங்கேற்றனர்.

**கடந்த கால நடவடிக்கைகள் ஆய்வு :**

கடந்தகால நடடிக்கைகள் பற்றிய ஆய்வு செய்வதுடன் இன்றைய காலகட்டத்தில் மாநில அரசு மருத்துவத்துறை, நிலஅளவைத்துறை, பட்டுவளர்ச்சித்துறை உள்ளிட்ட துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் போன்ற அத்தக்கூலிமுறை பணிநியமனங்களை பல்வேறு துறைகளில் தொடர்ந்து அமுல்படுத்திவருவதையும் இனியும் இக்கொடுமையை அனுமதிக்க முடியாது. இதுபோன்ற ஊழியர் விரோதப்போக்குகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக வலுவாக எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும், அதற்கான ஸ்தாபன விரிவாக்கப்பணிகளையும், களப்பணிகளையும் நாம் ஆற்ற வேண்டியுள்ளது என்பது குறித்தும் விரிவாகப்பேசினார். சங்கத்தின் மாநில மையக்கட்டிடம் புனரமைப்புப்பணி முடியும் நிலையில் அதற்கான நிதிவசூலில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. நிதிநிலுவைகளில் உள்ள நிலுவைகளை பல மாவட்டங்கள் நேர் செய்துவருவது பாராட்டுதலுக்குரியது. ஆனாலும் அதிகமான நிதிநிலுவைகள் இருப்பது மாநில மைய செயல்பாடுகளுக்கு பளுவை ஏறபடுத்துகிறது. எனவே, நிலுவை உள்ள மாவட்டங்கள் உடனடியாக நிலுவைகளை நேர்செய்திட முயற்சி மேற்கொள்ள வேண்டும். நடைபெற்ற பல்வேறு இயக்க நடவடிக்கைகளில் மாவட்டங்கள் சிறப்பாக பங்களிப்பை செலுத்தியிருந்தாலும், ஸ்தாபன பணிகளில், இயக்க நடவடிக்கைகளில் பெருவாரியான தோழர்கள் பங்கேற்கும் விதமாக பிரச்சாரங்களை, நோட்டீஸ், போஸ்டர் மற்றும் ஊழியர் சந்திப்பு இயக்கங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்திட வேண்டும் எனவும் பொதுச் செயலாளர் அவர்களால் வைக்கப்பட்ட அறிக்கை மற்றும் மாநிலப் பொருளாளர் அவர்களால் வைக்கப்பட்ட வரவு-செலவு மற்றும் நிதி நிலுவை அறிக்கையின் மீது மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஆரோக்கியமான விவாதத்திற்கு பின்னர் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## முடிவுகள்:

**உறுப்பினர் சந்தா:**

அனைத்துத்துறைகள் மற்றும் அனைத்து ஊழியர்களையும் சந்தித்து உறுப்பினர் சேர்ப்பு இயக்கமாக நடத்தப்பட்டு 2025 உறுப்பினர் சந்தாக்கள் இலக்கை நிறைவு செய்திட வேண்டும். வட்ட மாவட்ட மாநாட்டில் நமது சங்க அமைப்பு விதிகளின்படி பட்டியலுடன் உறுப்பினர் சந்தாவை இறுதிப்படுத்திட வேண்டும்.

**வட்ட, மாவட்ட பேரவைகள்:**

வட்ட, மாவட்ட பேரவைகள் சிறப்பாக திட்டமிடப்பட்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடத்தி முடித்திட வேண்டும். அனைத்து துறைவாரிச்சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வட்டப்பேரவைகளையும், வட்டக்கிளைகளின் சார்பாக மாவட்ட பேரவைக்கான பிரதிநிதிகள் பங்கேற்புடன் மாவட்ட பிரதிநிதித்துவப்பேரவைகளில் உத்தரவாதப்படுத்த வேண்டும். கடந்த ஒரு ஆண்டிற்கான விரிவான செயல் அறிக்கை மற்றும் வரவு-செலவு அறிக்கையினை எழுத்துபூர்வமாக வைத்து விவாதித்து, ஒப்புதல்பெறவேண்டும். ஊழியர்களின் பிரச்சனைகள் மற்றும் ஸ்தல பிரச்சனைகளை விவாதித்து தீர்மானங்களாக நிறைவேற்றிட வேண்டும்.

**மாநிலப்பேரவை:**

பழைய ஓய்வூதியம் வழங்கிட, அனைவருக்கும் காலமுறை ஊதியம் அமுல்படுத்திட, காலிப்பணியிடங்களை நிரப்பிட, பணிப்பளுவை குறைத்திட, அனைவருக்கும் காலமுறை ஊதியம் பெற்றிட உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வகையில் 2025 **நவம்பர் 8-ல் திருப்பூர் மாநகரில் திருப்புமுனையை ஏற்படுத்தும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை** மிக எழுச்சியோடு நடத்திட முடிவெடுக்கப்பட்டது.

**கட்டிட புணரமைப்பு நிதி:**

கட்டிடப்புணரமைப்பு பணிகள் முடிவடையும் நிலையில் நடைபெற்று வருகிறது. அதற்கான நிதியினை வழங்காத மாவட்டங்கள் முதல் 50 சதவீத நிதியை 09.08.2025க்குள் மாநில மையத்திற்கு அனுப்பிடுவது, மீதமுள்ள 50 சதவீத நிதியினை வட்ட, மாவட்ட பேரவைக்கு முன்பாக முழுமையாக நிறைவு செய்திட வேண்டும். மேலும், பிற நிதி நிலுவைகளையும் நிறைவு செய்து, நிலுவை இல்லாத மாவட்டங்களாக மாவட்ட பேரவை நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்:**

அகில இந்திய மாநில செயற்குழு நிர்வாகிகளாக, தோழர்.மு.அன்பரசு முன்னாள் மாநிலத்தலைவர், தோழர்.மொ.ஞானத்தம்பி முன்னாள் மாநில துணைத்தலைவர், தணிக்கையாளராக தோழர்.மு.சீனிவாசன், அகில இந்திய மகளிர் துணைக்குழு உறுப்பினராக தோழர்.சி.பரமேஸ்வரி, தேசிய செயற்குழு உறுப்பினர்களாக முன்னாள் பொதுச்செயலாளர் தோழர்.ஆ.செல்வம், மற்றும் தோழர்.தெ.வாசுகி, தோழர்.கோ. பழனியம்மாள், தோழர்.ஆ.தி.அன்பழகன், தோழர்.ம.அந்தோணிசாமி ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு வந்தார்கள்.

கடந்த 15 ஆம் மாநில மாநாட்டிற்கு பிறகு தமிழ்நாட்டின் சார்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்திற்கு தோழர்.மு.பாஸ்கரன், தோழர்.மு.சீனிவாசன், தோழர்.சா.டேனியல்ஜெயசிங், தோழர்.மு.செல்வராணி, தோழர்.அண்ணா.குபேரன், தோழர்.ம.அந்தோணிசாமி, தோழர்.வளர்மாலா, தோழர்.இ.மைக்கேல் லில்லி புஷ்பம் ஆகியோர் பங்கேற்றிட முடிவெடுக்கப்பட்டது.

**08.08.2025 - அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம்:**

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் போது கொத்தடிமை கூலி முறைகளான தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் சிறப்பு காலமுறை ஊதிய முறைகளில் தொடர்ந்து நியமனம் செய்யப்படுவதை கண்டித்தும் அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களை முதல்வரின் தேர்தல்கால வாக்குறுதிப்படி பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என வலியுறுத்தி ஆகஸ்ட் 8 ஆம் தேதி தமிழகம் முழுவதும் அனைத்து அலுவலகங்கள் முன்பாக ஆர்பாட்டங்கள் நடத்திடுவது என முடிவெடுக்கப்பட்டது.

**(சமீபத்தில் கொடிக்கம்பங்கள் பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது என, அவைகளை அகற்றிட வேண்டுமென உயர் நீதிமன்றம் தனி நீதிபதி அவர்கள் வழங்கிய தீர்ப்பின்படி கொடிக்கம்பங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. கொடிக்கம்ப வழக்கில், தனி நீதிபதி உத்தரவில் பெரும் பாதிப்பு இருந்தால், வழக்கில் IMPLEADING மனுவை தாக்கல் செய்து தங்கள் பாதிப்பினை கூறலாம் என்ற உத்தரவை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அடிப்படை உரிமை காக்க மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பு IMPLEADING மனுவை தாக்கல் செய்யப்பட்டது.)**

**பெறுநர்**

மாநில செயற்குழு உறுப்பினர்கள்

நகல். மாநில நிர்வாகிகள்

**பொதுச்செயலாளர்**

# மார்க்ஸ்சுக்காகவேவாழ்ந்த ஏங்கெல்ஸ் – ஆர்.ராஜா



தோழர் பிரடெரிக் ஏங்கெல்ஸ் 1820ஆம் ஆண்டு ஜெர்மனியின்பார்மென் நகரில் பிறந்தார். நெசவு ஆலை முதலாளியின் மகனாக இருந்தும், தொழிலாளர்களின்துன்பங்களைக் கண்டு கலங்கினார். 12 மொழிகள் அறிந்த அறிவு மேதையான ஏங்கெல்ஸ், மான்செஸ்டரில்தொழிலாளர் நிலைமையைக் கண்டு "இங்கிலாந்து தொழிலாளர் வர்க்கத்தின் நிலை" என்ற நூலை எழுதினார்.1844ஆம்ஆண்டு பாரிஸில் மார்க்ஸை சந்தித்து வாழ்நாள் தோழரானார். இருவரும் இணைந்து "கம்யூனிஸ்ட்அறிக்கை"யை 1848இல் வெளியிட்டனர். "ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம், கம்யூனிசம் என்னும்பூதம்" என்று தொடங்கும் இந்த அறிக்கை உலகை மாற்றியது. மார்க்ஸின்குடும்பத்தை பொருளாதார ரீதியாக ஆதரித்த ஏங்கெல்ஸ், மார்க்ஸின் 1883ல் மரணத்திற்குப்பின் "மூலதனம்" நூலின் இரண்டாம், மூன்றாம் பாகங்களை நிறைவு செய்தார். "இயற்கையின் இயக்கவியல்","குடும்பம், தனிச்சொத்து, அரசு" போன்ற சிறந்த நூல்களை எழுதினார்.ஏங்கெல்ஸ்மான்செஸ்டர் நிறுவனத்தில் 20 ஆண்டுகள் பணியாற்றி மார்க்ஸின் ஆராய்ச்சிக்கு நிதியுதவிசெய்தார். நியூயார்க் டிரிபியூன் பத்திரிகையில் மார்க்ஸின் ஜெர்மன் கட்டுரைகளை ஆங்கிலத்தில்மொழிபெயர்த்து அனுப்பினார். 1870ல் ஓய்வுபெற்று லண்டனில் மார்க்ஸ் அருகில் குடியேறினார்."டூரிங்கிற்குமறுப்பு" நூல் மூலம் விஞ்ஞான சோசலிசக் கொள்கைகளை வலுப்படுத்தினர்.விஞ்ஞானசோசலிசத்தின் இணை நிறுவனரான ஏங்கெல்ஸ், 1895 ஆகஸ்ட் 5ஆம் தேதி மறைந்தார். மார்க்ஸுக்காகவேவாழ்ந்த மாமனிதரின் நினைவு நாள் இன்று. ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அன்னா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


சுற்றறிக்கை எண்: 14/2025 நாள்: 29.07.2025

## 28.07.2025 அன்று Online ல் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

அன்பார்ந்த தோழர்களுக்கு வணக்கம்,

மாநில நிர்வாகிகள் கூட்டம் 28.07.2025 அன்று மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் தலைமையில் அவசர தேவை கருதி வலைதளத்தில் (Online) நடைபெற்றது. அதில் கடந்த 27.07.2025 அன்று நடைபெற்ற மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை மாவட்டங்களில் அமுலாக்கிடவும், முடிவுகளை அமுலாக்குவதில் மாவட்டங்களுடன் மாநில நிர்வாகிகள் தொடர் நடவடிக்கை மேற்கொள்வது என்ற பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது.

2025 உறுப்பினர் சேர்க்கை இலக்கை நிறைவு செய்திடவும், கட்டிட புணரமைப்பு நிதியை உடன் வசூல் செய்திடவும், வட்ட, மாவட்டப் பேரவைகளுக்கா தேதிகள் திட்டமிடவும் 08.08.2025 அன்று நடைபெறவுள்ள அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்ட இயக்கத்தை நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டு விரிவாக அனைத்துத்துறைகளுக்கும் பிரச்சாரமாக கொண்டு சென்று வலுவான ஆர்ப்பாட்டமாக நடத்திடுவது உள்ளிட்ட ஸ்தாபன மற்றும் இயக்கப்பணிகளை திட்டமிட்டு செயல்படுத்திட மாவட்டங்களில் உடன் மாவட்ட செயற்குழுக்களை கூட்டுவது என விவாதிக்கப்பட்டது. அதன்படி கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள்:**

- 09.08.2025-க்குள் அனைத்து மாவட்டங்களிலும் செயற்குழு கூட்டங்களை கூட்டுவது.
- மாவட்ட செயற்குழுக்களில் உறுப்பினர் சந்தாவை இறுதிப்படுத்துவது.
- மாநில கட்டிட புணரமைப்பு நிதியில் 50% ஐ மாவட்ட செயற்குழுவில் செலுத்துவது.
- வட்ட, மாவட்டப் பேரவைகளுக்கான தேதிகளை இறுதிப்படுத்துவது.
- 08.8.2025 - அனைத்து அலுவலகங்கள் முன்பு நடைபெறும் ஆர்பாட்டத்தை மிக எழுச்சியோடு நடத்திடுவது.
- AISGEF-க்கு தோழர்கள் இறுதிப்படுத்தப்பட்ட பட்டியல் அனுப்புவது. மற்றும் கடந்த மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட தோழர்.ம.அந்தோணிசாமி தொடர்வது உள்ளிட்ட தகவல்களோடு AISGEF மையத்திற்கு கடிதம் அனுப்புவது.

பெறுநர்
மாவட்டத் தலைவர் /மாவட்டச் செயலாளர்
நகல். மாநில நிர்வாகிகள்

பொதுச்செயலாளர்.

அனைத்து துறைகளிலும் நிரந்தர பணியிடங்களை ஒழித்துவிட்டு கொத்தடிமை கூலி முறைகளை அமுல்படுத்திட அரசு முயற்சித்துள்ளது. மேலும், அமைச்சுப்பணியாளர்களையும் தொகுப்பூதிய முறைகளில் நியமனம் செய்திட முடிவெடுத்துள்ளது, வெந்த புண்ணில் வேலை பாய்ச்சியது போலுள்ளது. இது அரசு ஊழியர்களை மட்டுமல்ல, படித்த இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். சமூக நீதி அரசு என்று சொல்லும் தமிழ்நாடு அரசு இவ்வாறு நீதியற்ற பணிநியமனங்களை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்.

எனவே, மேற்கண்ட பணி நியமனங்களை திரும்பப்பெறுவதுடன் சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட்களில் பணிபுரியும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள், செவிலியர்கள், பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள், PPP & COE பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து கொத்தடிமை கூலிமுறை பெறும் அனைவரையும் தேர்தல் கால வாக்குறுதிப்படி அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தி 08.08.2025 அன்று தமிழகமெங்கும் அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம் மிக எழுச்சியோடு நடத்தப்படவுள்ளது. பெருவாரியான அலுவலகங்களில் ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டு, அதிகப்படியான ஊழியர்கள் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒன்றுபடுவோம், போராடுவோம் முன்னேறுவோம்.

மாநிலத்தலைவர் பொதுச்செயலாளர்



அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் கடந்த ஜூன் 14,15 ஆகிய இரண்டு தினங்கள் டெல்லியில் நடைபெற்ற AISGEF Cultural Meeting -ல் தமிழ்நாட்டின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் தோழர்.சி.கல்யாணசுந்தரம் மற்றும் தஞ்சவூர் மாவட்ட துணைத்தலைவர் தோழர் A.R கவிதா (மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர்) ஆகிய இருவரும் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

☏ 28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமாரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.செசி**
**இ.மைக்கேல் வில்லி புஷ்பம்**


நாள்: 04.08.2025

**கொத்தடிமைக் கூலி முறைகளான தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் பணி நியமனங்களை திரும்பப்பெற வேண்டும். தேர்தல் கால வாக்குறுதிப்படி சிறப்பு காலமுறை ஊதியம் உள்ளிட்ட அனைவரையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டுமென வலியுறுத்தி.......**

## 08.08.2025 - அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம்

அன்புடையீர்,

கடந்த 27.07.2025 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 08.08.2025 அன்று அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம் நடத்திடுவது என முடிவெடுத்துள்ளது. தமிழ்நாடு அரசு தற்போது கிட்டத்தட்ட அனைத்து துறைகளிலும் தொகுப்பூதிய முறைகளை அமுல்படுத்துவதுடன் காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் என கொத்தடிமை கூலிமுறைகளை தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது. மருத்துவத்துறையில் அரசாணை எண் 300ன்படி நிரந்தரப்பணியிடங்களை சரண்டர் செய்யப்பட்டு, Nurse, Pharmachist, Lab Technician உள்ளிட்ட 4000 பணியிடங்கள் காண்டராக்ட் மூலம் நியமனம் செய்யப்படவுள்ளன. பல்நோக்கு பணியாளர்கள் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு ஊதியமுறைகளில் எந்தவித உத்தரவாதமுமின்றி பணியாற்றிவருகிறார்கள். நில அளவைத்துறையில் சென்ற ஆண்டு அரசாணை எண் 297 ன்படி 707 தற்காலிக Field Assistant பணியிடங்கள் ஓராண்டுக்கு நியமனம் செய்யப்பட்டது. தற்போது அரசாணை 420ன்படி மேலும் மூன்றாண்டுகளுக்கு தற்காலிக ஊதியமுறை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்திட கடந்த 40 ஆண்டுகளாக போராடி வரும் நிலையில் தற்போது அப்பணியிடங்களை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்திட முடிவெடுத்துள்ளது இந்த ஆட்சியின் மீதான நம்பிக்கையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. பட்டுவளர்ச்சித்துறையில் குன்னூர், ஓசூர், தாளவாடி, ஊத்தங்கரை, கொள்ளட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள ஆயிரக்கணக்கான காடுகளை/ தோட்டங்களை இத்துறையிடமிருந்து அரசு கையகப்படுத்தும் முடிவானது, இத்துறையை அழிக்கும் நோக்கமாகும். அரசு ஐடிஐ களில் பயிற்றுனர்கள் தொகுப்பூயத்தில் பணி நியமனம்செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற அனைத்து துறைகளிலும் நிரந்தர பணியிடங்களை ஒழித்துவிட்டு கொத்தடிமை கூலி முறைகளை அமுல்படுத்திட அரசு முயற்சித்துள்ளது. மேலும், அமைச்சுப்பணியாளர்களையும் தொகுப்பூதிய

முறைகளில் நியமனம் செய்திட முடிவெடுத்துள்ளது துரதிஷ்டவசமானது. இது அரசு ஊழியர்களை மட்டுமல்ல, படித்த இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். சமூக நீதி அரசு என்று சொல்லும் தமிழ்நாடு அரசு இவ்வாறு நீதியற்ற பணிநியமனங்களை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்.

எனவே, மேற்கண்ட பணி நியமனங்களை திரும்பப்பெறுவதுடன் தேர்தல் காலத்தில் அறிவித்துள்ளபடி சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட்களில் பணிபுரியும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள், செவிலியர்கள், பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள், PPP & COE பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து கொத்தடிமை கூலிமுறைகளில் ஊதியம் பெறும் ஊழியர்களை பணிநிரந்தரம் செய்திட வேண்டுமென வலியுறுத்தி 08.08.2025 அன்று தமிழகமெங்கும் அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம் மிக எழுச்சியோடு நடத்தப்படவுள்ளது. பெருவாரியான அலுவலகங்களில் ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டு, அதிகப்படியான ஊழியர்கள் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒன்றுபடுவோம், போராடுவோம் முன்னேறுவோம்.

பொதுச்செயலாளர்

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**

**Tamilnadu Government Employees' Association**

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம் (பதிவு எண் 237/84)
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத்தலைவராகவும், தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவராக திறம்பட செயல்பட்டவர். தற்போது தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் நாகை மாவட்ட செயலாளருமான தோழர்.சு.சிவகுமார் நேற்று இரவு (31.07.2025) இயற்கை எய்தினார். சமரசமற்ற போராளி. தோழமைக்கு இலக்கணமாக திழ்ந்தவர். அவர்களின் இறப்பு செய்தியறிந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது ஆழ்ந்த அஞ்சலியையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில மையம்.

# தோழர் சு.சிவக்குமார் அவர்களுக்கு அஞ்சலி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத்தலைவரும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் நாகை மாவட்ட செயலாளர் தோழர் சு.சிவக்குமார் அவர்களுக்கு நினைவஞ்சலி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக நடைபெற்றுது இந்த நிகழ்வில் மாநிலத் தலைவர் மு.பாஸ்கரன் மாநில பொருளாளர் சா.டானியல் ஜெய்சிங் மாநில துணைத்தலைவர் செல்வராணி, துணைப் பொதுச் செயலாளர் தோழர் வே.சோமசுந்தரம் ஆ.ரங்கசாமி மாநிலச் செயலாளர்கள்வே. விஜயகுமரன் சு.வளர்மாலா, செ.பிரகாஷ் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர் நாகை மாவட்ட தலைவர், செயலாளர் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் தொழிற்சங்க கூட்டமைப்பின் நிர்வாகிகள் முன்னாள் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள் நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சிக்காக தோழரின் உடல் தானம் வழங்கப்பட்டது மேலும் அவரது இரு கண்களும் கண் தானம் செய்யப்பட்டது. ●

# ஜூலை 9-அகில இந்திய வேலை நிறுத்த போராட்டம்

**திருச்சி**

ஜாக்டோ ஜியோ மாநில மைய முடிவின்படி 09.07.2025 காலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்ட கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர், அரசு ஊழியர் கலந்து கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பால் பாண்டி நீலகண்டன், நாகராஜன், உதுமான் அலி, ஆகியோர் கூட்டு தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று வரவேற்பு உரையாற்றினார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் உதுமான் அலி. ஆர்ப்பாட்டத்தை மாநில ஒருங்கிணைப்பாளர் அன்பரசன் துவக்கி வைத்து துவக்கவுரையாற்றினார்.

அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்ட கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பால் பாண்டி, நாகராஜன், நீலகண்டன் ஆகியோர் பேசினார்கள். ஆசிரியர், அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் பொன் மாடசாமி, ராஜ்மோகன், சார்லஸ் செல்வராஜ், அந்தோணி எட்வர்ட் ஜீவானந்தம், அசோகன், அல்போன்ஸ், செந்தில் குமார், சித்ரா, கல்யாணி, சுரேஷ், சிவசங்கர், ராஜ்மோகன், கருணாநிதி, எபி ராஜேந்திரன், ராதா, சுரேஷ் பிரபு, பெரியசாமி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். ஜாக்டோ -ஜியோ உயர் மட்டக்குழு உறுப்பினர், மாநில தலைவர் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் டேவிட் லிவிங்ஸ்டன் நிறைவுரையாற்றினார். மாவட்ட நிதி காப்பாளர் ஆரோக்கியராஜ் நன்றி கூறினார். 11 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் கோரிக்கை முழக்கம் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டத்தில் 350 க்கும் மேற்பட்ட ஆசிரியர் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். இன்றைய வேலை நிறுத்த போராட்டத்தில் பல்வேறு துறை சார்ந்த ஆசிரியர் அரசு ஊழியர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

**மதுரை**

09.07.2025 (புதன்கிழமை) காலை 11.00 மணியளவில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் க.சந்திரபோஸ், பா. பாண்டி, வி.ச.நவநீதகிருஷ்ணன், மு. பொற்செல்வன். சி.பீட்டர் ஆரோக்யராஜ்,இரா. தமிழ் ஆகியோர் தலைமையில் அகில இந்திய வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம் பேரணியுடன் நடைபெற்றது. ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் எ.பி. முருகையன்சிறப்புரையாற்றினார். ஓய்வூதிய ஒழுங்காற்று ஆணையத்தை (PFRDA) கலைத்து நாடு முழுவதும் பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமுல்படுத்திடவும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிடவும் தொழிலாளர் விரோத சட்ட திருத்தங்களை திரும்ப பெற வலியுறுத்தியும். ரயில்வே, சாலை போக்குவரத்து, சுரங்கங்கள், துறைமுகங்கள், தபால் துறை, மின்சாரம், பெட்ரோலியம், மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மையமாகும் நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்தியும். காலிப் பணியிடங்களை நிரப்பிடவும் புதிய பணியிடங்களை உருவாக்கி இளைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பினை உறுதி செய்திடவும் வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் - அரசுப்பணியாளர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### வேலூர்

அகில இந்திய வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம் ஜாக்டோ ஜியோ உடன் இணைந்து வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டு மத்திய மாநில அரசுகளின் உடைய கொள்கையை எதிர்த்து கோஷமிட்டனர்.

### தஞ்சாவூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்தின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் பனகல் மாளிகை முன்பு நடைபெற்றது இந்த நிகழ்வுக்கு மாவட்ட தலைவர் தோழர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மற்றும் துறை வாரி சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர் மேலும் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆ. ரங்கசாமி கலந்துகொண்டு நிறைவுறியாற்றினார் இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த நாள் புதிய பேருந்து நிலையம் முன்பாக சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர் 51 பெண் தோழர்கள் உட்பட 136 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### தர்மபுரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தர்மபுரி மாவட்டம் மற்றும் ஜாக்டோ ஜியோ சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர் 27 பெண் தோழர்கள் உட்பட 110 பேர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசினுடைய ஊழியர் விரோத போக்கை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

### கள்ளக்குறிச்சி

ஜாக்டோ ஜியோ கள்ளக்குறிச்சி மாவட்டம் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் ரமேஷ், ஆனந்த் கிருஷ்ணன், அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில செயலாளர் தோழர் ஆனந்த் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் ரவி தமிழ்நாடு நில அளவை அலுவலர் ஒன்றிப்பு மாநில துணைத்தலைவர் தோழர் செந்தில் முருகன் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கம் மாவட்ட செயலாளர் தோழர் சாமிதுரை, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில செயலாளர் விஜயா, தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில துணைத்தலைவர் வேளாங்கண்ணி, தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்க மாவட்ட தலைவர் செந்தில் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பைச் சார்ந்த மாவட்ட வட்ட கிளை நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் கே. மகாலிங்கம் மற்றும் ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில துணைத்தலைவர் தோழர் அ.ரஹீம் சிறப்புரை ஆற்றினார் 800 மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தேனி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ ஜியோவின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்,

தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என திரளாக பங்கேற்றனர்.

### ராமநாதபுரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என 954 க்கு மேற்பட்ட முன்னணி ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டு ஊழியர் விரோத போக்கினை கடைபிடிக்கின்ற மத்திய,மாநில அரசுகளின் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### திண்டுக்கல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திண்டுக்கல் மாவட்டம் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது இதில் கூட்டுறவுத்துறை பட்டு வளர்ச்சி துறை வருவாய்த்துறை ஊரக வளர்ச்சி துறை சத்துணவு ஊழியர்கள் மாநகராட்சி நெடுஞ்சாலைத்துறை வனத்துறை மருத்துவத்துறை பொது சுகாதாரத் துறை பேரூராட்சி சமூக நலத்துறை வேளாண்மை மோட்டார் வாகன பராமரிப்பு துறை அரசு தொழிற்பயிற்சி மையம் என பல்வேறு துறை வாரி சங்கங்களிலிருந்து 350 க்கும் மேற்பட்ட தோழர்கள் திரளாக கலந்து கொண்டு மத்திய மாநில அரசுகளின் ஊழியர் விரோதத்திற்கு கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### வேலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேலூர் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என திரளாக இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

### செங்கல்பட்டு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் 39 பெண் தோழர்கள் உள்ளிட்ட 160 பேர் பங்கேற்றம் ஆசிரியர்கள் 300-க்கும் மேற்பட்ட ஒரு கலந்து கொண்டு இந்த நிகழ்வை மத்திய மாநில அரசுகளின் ஊழியர்கள் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம் மூன்று இடங்களில் நடைபெற்றது இந்த நிகழ்வில் ராசிபுரம் அரசு கல்லூரியில் மற்றும் பெண்கள் கல்லூரியின் சார்பாக பேராசிரியர்கள் அரசு ஊழியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் 400 மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டம் நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

### கரூர்

கரூர் மாவட்டத்தில் ஜாக்டோ ஜியோ சார்பாக அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம், கரூர் தலைமை தபால் அலுவலகம் முன்பு நடைபெற்றது இதில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அன்பழகன் தலைமை தாங்கினார் வேலுமணி செல்வத்துறை இருதயசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும் தேசிய கல்விக் கொள்கை 2020யை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் எட்டாவது ஊதிய மாற்றத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தன இந்த நிகழ்வில் தோழர் கண்ணன்

பாலசுப்பிரமணியன் இளங்கோ உள்ளிட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என 650 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் தோழர் மு.செல்வராணி நிறைவுறையாற்றினார்.

### கோயம்புத்தூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோயம்புத்தூர் மாவட்டத்தின் சார்பாக பொள்ளாச்சி வடக்கு வட்ட கிளை மற்றும் தெற்கு வட்ட கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அகில இந்திய வேலை நிறுத்தத்தின் கோரிக்கை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நீலகிரி மாவட்டத்தின் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டங்கள் கூடலூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உதகை முன்பு சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு மத்திய மாநில அரசுகள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அனைத்து ஊழியர்களுக்கும் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### திருவள்ளுவர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஜாக்டோ ஜியோவின் சார்பாக திருவள்ளுவர் மாவட்டத்தில் அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம், திருவள்ளுவர் மருத்துவக் கல்லூரி செல்லும் சாலை சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுடன் 800 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாநில அரசுகள் உடனடியாக அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### ராமநாதபுரம்

ராமநாதபுரம் பாளையங்கோட்டை எல்ஐசி அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது இதில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

### சேலம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ ஜியோ சார்பாக சேலம் மாவட்டத்தில் அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் வருவாய் துறை ,ஊரக வளர்ச்சி துறை, கூட்டுறவுத்துறை,, சுகாதாரத்துறை, தொழிற்பயிற்சி மையம், நில அளவை ஒன்றிப்பு,பொது சுகாதாரத்துறை, சத்துணவு ஊழியர்கள், வேளாண்மை துறை, மருந்தாளுனர், சாலை பணியாளர்கள் வருவாய் கிராம உதவியாளர்கள் என ஆயிரத்திற்கு மேற்பட்ட தோழர்கள் சிறப்பாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

### சென்னை

சென்னை மாவட்டத்தில் சேப்பாக்கம் எழிலகம் முன்பு அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் 500க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர் பழைய ஓய்வூதிய திட்டத்தை அனைத்து ஊழியர்களுக்கும் அமல்படுத்த வேண்டும் இந்த கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

●

# விருதுநகர் மாவட்ட காவல்துறையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

**திருச்சி**

விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட கட்டடமான தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமித்தது மட்டுமல்லாமல் அதை மீட்க சென்ற மாநில/மாவட்ட நிர்வாகிகளை தங்கள் சுயநலத்திற்காக சங்கத்தை பிரித்த துரோகிகளின் தூண்டுதலின் பேரில் விருதுநகர் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு யோகேஷ்குமார், காவல் உதவி ஆய்வாளர் திரு. ராமர் ஆகியோரின் தலைமையில் காவல்துறையினர் மூலம் காட்டுமிராண்டி தனமாக கொலைவெறி தாக்குதல் நடத்தி மனித உரிமை மீறல் வன்முறை வெறியாட்டம் நடத்திய விருதுநகர் மாவட்ட காவல்துறையை கண்டித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் ஐ.அல்போன்சா வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர். சோ.நவநீதன்,தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் எம் வி.செந்தமிழ்செல்வன், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பொன் மாடசாமி, தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜீவானந்தம், தமிழ்நாடு கல்வி துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநில செயலாளர் வெங்கடேச பாபு, தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்டத் தலைவர் சித்ரா தேவி, மேனாள் மாநில துணைத் தலைவர் பெரியசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். மேலும் ஒரு தலைபட்சமாகவும், சட்ட விதிகளுக்கு எதிராகவும் செயல்பட்ட காவல் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், கட்டடத்தை விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்கள்.தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநில செயலாளர் சகாதேவன். நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் கா.சிவசங்கர் நன்றி கூறினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர் பெரியசாமி, வட்டக்கிளை நிர்வாகிகள் சந்திரா, பாரதி, சங்கரநாராயணன், மணிகண்டன், அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் மதிவாணன் உள்ளிட்ட தோழமை சங்க நிர்வாகிகள், அனைத்து துறை ஊழியர்கள் மற்றும் முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

**மதுரை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்டத்தின் சார்பாக விருதுநகர் மாவட்ட காவல் துறையை கண்டித்து மாவட்ட துணைத் தலைவர் த.மனோகரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மாவட்டச் செயலாளர் தோழர் க.சந்திரபோஸ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் விருதுநகர் மாவட்டம் தமிழ்நாடு அரசு சங்க கட்டடத்தை சட்டவிரோதமாக கடந்த ஏழு ஆண்டுகளாக ஆக்கிரமித்தது மட்டுமல்லாமல் அதை மீட்க சென்று மாநில நிர்வாகிகளை தங்கள் சுயநலத்திற்காக சங்கத்தை பிரித்து

துரோகிகளின் தூண்டுதலின் பெயரில் விருதுநகர் டிஎஸ்பி மற்றும் உதவி ஆய்வாளர் தலைமையில் காவல்துறையின் நடத்திய காட்டுமிராண்டித்தனமான கொலை வெறி தாக்குதலை கண்டித்து விளக்க உரையாற்றினார் இந்த நிகழ்வில் திருமங்கலம் வட்டக் கிளை செயலாளர் ச.மருது பாண்டியன்,தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் சு.கிருஷ்ணன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் ஆர். சந்திரசேகரன் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் மு.முகைதீன் அப்துல் காதர் ,தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் சு.பாண்டி செல்வி,தமிழ்நாடு கருவூலக்கணக்கு துறை அலுவலர் சங்க மாநில தலைவர் ஜெ. மூர்த்தி, தமிழ்நாடு அரசு கூட்டுறவு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் ஆர். நவநீதகிருஷ்ணன், TNSOU மாவட்டச் செயலாளர் நா.ரகுபதி உள்ளிட்ட துறைவாரி மற்றும் தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டனை உரையாற்றினார் நிறைவாக மாவட்ட பொருளாளர் ஆ.பரமசிவன் நன்றியுரை கூறினார். தமிழ் நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்தி அத்துமீறி அராஜகம் செய்த விருதுநகர் மாவட்ட காவல் துறையினரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு போஜன் வட்ட தலைவர் தலைமையில் நடைபெற்றது.

### நீலகிரி

கண்டன ஆர்ப்பாட்டத்தை ஊரக வளர்ச்சி துறை வட்ட செயலாளர் துவக்கி வைத்தார். தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் நீலகிரி மாவட்டத்தின் செயலாளர் சிவபெருமாள், பந்தலூர் வட்ட செயலாளர் ரவிச்சந்திரன் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் வட்ட செயலாளர் விஸ்னுதாஸ், தமிழ் நாடு பகுதி சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில செயலாளர் மகேஸ்வரி ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள். தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் சி.பரமேஸ்வரி கண்டன உரை ஆற்றி கண்டன ஆர்ப்பாட்டத்தை நிரைவு செய்தார். இறுதியாக வட்ட பொருளாளர் நன்றி கூறினார்.

### நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாகப்பட்டினம் மாவட்டம் சார்பாக விருதுநகர் மாவட்டத்தில் ஊழியர் விரோத போக்கை கடைபிடித்த காவல்துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் ஆ. ரூஸ்வெல்ட் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநிலச் செயலாளர் தோழர் வளர்மாலா கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினார்.

### கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கரூர் மாவட்டத்தில் விருதுநகர் மாவட்ட காவல் துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநில துணைத்தலைவர் மு. செல்வராணி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

### சேலம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சேலம் மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் தோழர் என். திருவரங்கன் தலைமையில் விருதுநகர் மாவட்டத்தில் மாநில பொதுச் செயலாளர், மற்றும் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்திய காவல்துறையின் அடாவடித்தனத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் பி. சுரேஷ் உள்ளிட்ட

மாவட்ட ,வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் துறை வாரி சங்க மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

தூத்துக்குடி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தூத்துக்குடி மாவட்டத்தில் விருதுநகர் மாவட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மீது காவல்துறையின் அத்து மீறலை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் தோழர் உமாதேவி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாநில துணைத்தலைவர் தோழர் தே. முருகன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

### திண்டுக்கல்

விருதுநகர் மாவட்ட காவல் துறையை கண்டித்து திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து வட்டக் கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

### திருப்பத்தூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பத்தூர் மாவட்டத்தின் சார்பாக விருதுநகர் மாவட்டத்தில் எழுச்சி நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுச்செயலாளர் உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் மீது விருதுநகர் மாவட்ட காவல்துறை நடத்திய அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திருவாரூர்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக விருதுநகர் மாவட்ட அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற எழுச்சி நாள் கருத்தரங்கு நிகழ்வில் மாநில பொதுச் செயலாளர் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் காவல்துறை நடத்திய அத்துமீறலை கண்டித்து மாவட்டத் துணைத் தலைவர் தெட்சிணாமூர்த்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது நிகழ்வில் மாவட்டச் செயலாளர் தோழர் செங்குட்டுவன் மற்றும் துறை வாரிச் சங்க மாவட்ட ,வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

### அரியலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரியலூர் மாவட்டத்தின் சார்பாக விருதுநகர் மாவட்ட காவல் துறையை கண்டித்து மாலை நேர ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் வளாகம் மாவட்ட கருவூலம் முன்பாக மாவட்ட தலைவர் தோழர் என். வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் எம்.கே. ஷேக் தாவூத் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் இந்த நிகழ்வில் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு காவல்துறையின் நடவடிக்கையை கண்டித்து கண்டன உரையாற்றினார்கள்.

### ராணிப்பேட்டை மாவட்ட செயற்குழு

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வாலாஜா பேட்டையில் விரிவடைந்த மாவட்ட செயற்குழு நடைபெற்றது இதில் மாவட்ட தலைவர் தோழர் எழில் புதிதாக தேர்வு செய்யப்பட்டார் முன்னாள் மாவட்ட தலைவர் தோழர் கென்னடி அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழாவும் அதனை தொடர்ந்து மாவட்ட நிர்வாகிகள் கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில் இந்த நிகழ்வில் மாநிலச் செயலாளர் தோழர் விஜயகுமாரன் கலந்து கொண்டு எதிர்காலத் திட்டமிடுதல் மற்றும் சங்கப் பணிகள் குறித்து நிறைவுரை ஆற்றினார்.

●

# தோழர்.ஆர்.எம்.எஸ் அவர்களின் நினைவஞ்சலிக்கூட்டம்



### திருவாரூர்

தோழர்.ஆர்.எம்.எஸ் அவர்களின் நினைவஞ்சலிக்கூட்டம் மாவட்ட செயலாளர் எஸ். செங்குட்டுவன் தலைமையில் திருவாரூர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. நினைவஞ்சலிக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்சங்க துணைப்பொதுச்செயலாளர். தோழர். வெ.சோமசுந்தரம், மேனாள் மாநில செயலாளர் தோழர்.எம்.சௌந்தரராஜன், மாவட்ட இணைச்செயலாளர்கள் தோழர்.பரமேஸ்வரி, தோழர். மகாலெட்சுமி,திருவாரூர் வட்டத்தலைவர் தோழர். தம்பிதுரை,முன்னாள் மாவட்ட இணைச்செயலாளர். தோழர்.மகாலிங்கம், சாலைப்பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் முத்துக்குமார், சத்துணவு ஊழியர்சங்க மாவட்ட செயலாளர் ஜோதி ,துறைவாரிச்சங்க தோழர்கள் பாஸ்கர், பொன்முடி, விஜயலெட்சுமி, ஸ்ரீதர், மேரி, அகிலா, ராஜேஸ்வரி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு தோழருக்கு நினைவஞ்சலியை செலுத்தினர்.

### ஈரோடு

தோழர் ஆர் எம் எஸ் நினைவஞ்சலி கூட்டம் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்றது அந்த நிகழ்வில் மாநில பொதுச் செயலாளர் தோழர் மு.சீனிவாசன் கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்தினர் இந்த நிகழ்வில் மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் பெரம்பலூர் மாவட்டம் தோழர் இரா. முத்து சுந்தரம் அவர்களுடைய நினைவு நாள் அவருடைய நினைவை போற்றும் வகையில் தோழருக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது தோழருக்கு புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் வட்ட கிளை நிர்வாகிகள் துறைச்சங்க தலைவர்கள் தொழிற்சங்க சங்க தலைவர் கலந்து கொண்டனர்.

### தென் சென்னை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்தென் சென்னை மாவட்டம் தோழர் இரா முத்து சுந்தரம் அவர்களுடைய நினைவு நாள் அவருடைய நினைவை போற்றும் வகையில் தோழருக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது தோழருக்கு புகழாரம் செலுத்தப்பட்டது தோழர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மேலான் பொதுச் செயலாளர் தோழர் ஆ .செல்வம்தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில தலைவர் தோழர் பாஸ்கரன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில பொருளாளர் தோழர் டேனியல் ஜெய்சிங் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்மாநில செயலாளர் தோழர் விஜயகுமாரன் தென் சென்னை மாவட்ட தலைவர் தோழர் கோபிநாதன் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் முத்து குமர சாமி வேல் தென் சென்னை மாவட்ட இணைச் செயலாளர் தோழர் மகேந்திரன் துறை சங்க தோழர்களே கலந்து கொண்டனர்.

### சேலம்

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம், எடப்பாடி கோட்டம் சார்பாக, கடந்த 29-07-25 அன்று மாநிலம் தழுவிய போராட்டத்தின் ஒரு பகுதியாக எடப்பாடி நெடுஞ்சாலைத்துறை க(ம)ப கோட்டப் பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற்ற தீப்பந்தம் கையில் ஏந்தி மாலை நேர தர்ணா போராட்டத்திற்கு முன்னதாக, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் பொதுச் செயலாளரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவராகவும் இருந்த தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் நினைவு நாள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைமை: தோழர். கி.தங்கராஜி, மாநில துணைத் தலைவர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம் நினைவஞ்சலி: தோழர். மு.தங்கராசு, எடப்பாடி கோட்டத் தலைவர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம். புகழஞ்சலி: தோழர். பு.சுரேஷ், மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். நன்றியுரை: தோழர். தா. கலைவாணன் அந்தோணி, மாவட்ட இணைச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். ●

கட்டுரை

# தலைமைப் பண்புகள்

**- வெ.சோமசுந்தரம்**

அதென்ன... தலைமைக்கு என்று தனிப் பண்புகள் உண்டா? ஆம். தலைமைக்கு என தனிப் பண்புகள் தேவை. தனி மனிதனின் பண்புகள்.. அவர் வாழ்ந்துவரும் சமூகத்தின் பண்பாடு..கலாச்சாரம் சார்ந்தவைதான். ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் நிலவும் பண்புகள் சமூக அமைப்பு மாறும்போது..மாறிவிடுகின்றன.. நேற்று தவறு என்பது இன்று சரி.. இன்று சரி என்பது நாளை தவறு.. இதுதான் எதார்த்தம்.

யாரும் பிறக்கின்ற பொழுதே நல்ல அல்லது தீய பண்புகளுடன் பிறப்பதில்லை.. வளர்ச்சிப் போக்கில்தான் பண்புகள் வளர்கின்றன. அழிகின்றன..சமூகம்.. பண்பாடு..ஆகியவை சார்ந்த பண்புகளாக.. (1) முதலாளித்துவ (2) நிலப்பிபுத்துவ (3) தொழிலாளி வர்க்கங்கள் சார்ந்தவைகளாகும். நாம் வாழ்ந்துவரும் சமூகம்-நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவ சமூகம். நமது பண்புகளில் பெரும்பாலானவை நிலப்பிரபுத்துவ முதலாளித்துவம் சார்ந்தவைகள்தான்.

வேத காலம் தொட்டு வாழையடி வழையாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் பழக்க வழக்கங்களில் பெரும்பாலானவை இன்றும் நம்மிடம் ஆதிக்கம் செலுத்திவருகின்றன.

நம்மிடையே நிலவும் இயற்கை, உலகம், சமூகம் ஆகியவை சார்ந்த பார்வை-நம்பிக்கைகள் ஆகிய அனைத்துமே ஆளும் வர்க்கங்களால் காலங்காலமாக நம் பொது புத்தியில் ஏற்றப்பட்டவை. அதனால்தான் நம்மிடம் அடிக்கடி சுயநலமும், ஆதிக்க உணர்வும் தலைக்காட்டுகிறது.

இன்றைக்கும் ஆளும் வர்க்கங்கள்-"கடமையைச் செய்-பலனை எதிர்பார்க்காதே" எனவும், தனி மனித அமைதி, தியானம், சுய முன்னேற்றம் என பல கருத்துக்களை மிகவும் சாதுர்யமாக, பல அமைப்புகளின் மூலம் நம்மிடையே பரப்புகின்றன. நம்மை பிற்போக்காளர்களாக மாற்றிடவும், பிரம்மைகளுக்குள் சிக்குண்டவர்களாக மாற்றிடவும் ஊடகங்களும் இன்று லாவகமாகப் பயன்டுத்தப்படுகின்றன. தனியார் மய-தாராய மய.. உலக மயத்தின் தாக்கமும் நம்மிடையே அதிகரித்து வருகின்றது. எப்படி ஒரு தொற்றுநோய் நமக்குத் தெரியாமலேயே நம்மைத் தாக்கி நம்மை நோயில் வீழ்த்திவிடுகின்றதோ, அப்படியே உலகமய தாக்கம் இன்று நம்மைச் சீரழித்து வருகின்றது.

"உலகமய தாக்கம் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது.. நான் சுத்த சுயம்பிரகாசம்" என நம்மில் எவரும் சொல்ல முடியாது. அப்படி சொன்னால் அது முழு உண்மையல்ல. நம்மிடமுள்ள பண்புகளில் பெரும்பாலானவைகள் நிலப்பிரபுத்துவம்-முதலாளித்துவம் சார்ந்தவைதான். அது நமக்கே தெரியாமல் இருக்கலாம். ஆனால் உண்மை அதுதான்.

எனவே, சங்க அமைப்புகளின் தலைமைப் பொறுப்புகளில் உள்ள ..வர்க்க போராளிகளுக்கு.. பிறரிடமிருந்து மாறுபட்ட தனித்தன்மைகள் வாய்ந்த பண்புகள் அவசியம் தேவை.. அப்பொழுதுதான் அவரால்... மற்றவர்களால் உண்மையிலேயே மதிக்கப்படக் கூடிய தலைவராக பரிணமிக்க முடியும்.

"ஒரு தலைவரின் வரலாறென்பது அவருடைய பண்புகளிலிருந்துதான் உருவாகின்றது." நம்முடைய தலைவர்களில் பலருடைய வரலாறு அவர்களுடைய பண்புகளால் இன்னமும் நமக்கு வழிக்காட்டி வருகின்றது.

எல்லாவிதமான பண்புகளையும் ஒருவர் ஒரே நாளில் கற்று நடைமுறைக்கு கொண்டுவந்துவிட முடியாது. ஆனால் எப்படி ஒரு விதை ஒரு மரமாகவும், ஒரு சொட்டு பெரு வெள்ளமாகவும் மாறுகிறதோ அதுபோல காலவரை நிர்ணயித்து ஒவ்வொரு நற்பழக்கத்தையும் நடைமுறைக்கு கொண்டுவந்தால் நிச்சயம் நாம் நற்பண்புகள் மிகுதியாகவுள்ள தலைவராகப் பரிணமித்து வளர முடியும். இதற்கு தேவையானது சங்கல்பமே..

ஒரு தலைமைக்கு தேவையான நற்பண்புகள் எவை?

ஒரு தலைவரின் அடிப்படைத் தேவை.. உடல் ஆரோக்கியம்.. மன உறுதி..புரட்சிகர உணர்வு.. தைரியம்.. எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை..கடின உழைப்பு. இவைகள் அனைத்துமே உடல் ஆரோக்கியம் சாந்தவையே. உடல் ஆரோக்கியம் இல்லாமல் நீண்ட

நேரம்.. நீண்ட காலம் உழைக்க முடியாது. உடல் ஆரோக்கியம் பேணுவதில்.. ஒரு அறிவியல் ரீதியான பார்வை..அணுகுமுறை தேவை. இதில் நிலவும் பலவீனத்தால் இன்று நாம் பலரை இழந்துள்ளோம் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தலைமைப் பொறுப்பிலுள்ள ஒவ்வொருவரும்..

புத்திக் கூர்மையும், அறிவும், எல்லா விஷயங்களிலும் அறிவியல் பூர்வமான சிந்தனைப் போக்கும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லா பிரச்சினைகளிலும் சரிவரப் புரிந்து கொண்டு.. தெளிவாக விளக்க முடியும்.

உணர்வுப் ப+ர்வமாக பக்குவப்பட்டிருக்க வேண்டும். அவரிடம் என்ன உணர்வுள்ளதோ..அதையேதான் பிறரும் பின்பற்றுவார்கள் என்பதை அவர் தெரிந்து செயல்பட வேண்டும்.

எல்லா விஷயத்திலும் தயக்கமில்லாதவராகவும், பிறருக்கு சலிப்ப+ட்டாதவராகவும் இருக்க வேண்டும். அவரிடம் தயக்கம் இருந்தால் அது பிறரையும் தொற்றிக் கொள்ளும். அவர் சலிப்ப+ட்டுவராக இருந்தால் யாரும் அவரிடம் நெருங்க மாட்டார்கள்.

விவாதங்களை அமைதியாக, பொறுமையாக, விபரம் கேட்டறிந்து அவைகளை ஆராய்ந்து ஒருமித்த கருத்தை உருவாக்க தெரிந்தவராக இருக்க வேண்டும். காது கொடுத்தே கேட்காதவராக இருந்தால் யாரும் எதையும் சொல்ல மாட்டார்கள். பிறகு அவர் விஷயம் தெரியாதவராகத்தான் இருக்க வேண்டி வரும்.

"பயிற்சிதான் திறமையை வளர்க்கும்".. "சித்திரமும் கைப்பழக்கம்".. சிறு குழந்தைக்கூட பயிற்சி கொடுத்தால் அற்புதங்களை நிகழ்த்துகிறது. எனவே, தொண்டர்களுக்கு கற்று கொடுத்து அவர்களை சாதனையாளர்களாக மாற்றிடத் தூண்டுபவராக இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கான பிரச்சினைகளையும், அவைகள் முன்வருவதற்கான காரணங்களையும், தீர்வுக்கான வழிகளையும் எடுத்துக்கூறி அவர்களைக் கிளர்ந்தெழச் செய்பவராக இருக்க வேண்டும்.

பிறரைக் குற்றம் சாட்டி தப்பித்துக் கொள்ளாமல் தன்னுடைய செயல்களுக்கு தானே பொறுப்பேற்றுச் செயல்படும் நாகரிகமும், பக்குவமும் உள்ளவராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பிறர் அவரிடம் நம்பிக்கையுடன் நெருங்குவர்கள். சொல்லும் வேலைகளை தயக்கமின்றி செய்வார்கள். பலவகை... நேர்மறைச் சிந்தனை போக்குகள் உள்ளவராக இருக்க வேண்டும். எதை எப்படி செய்தால் நன்றாக இருக்கும்" என்கிற நவீன போக்கும் புதுமைத் திட்டங்களை கொண்டவராக இருக்கவும் வேண்டும். "இளைய தலைமுறையினர் நம்மைவிட திறமையானவர்கள்" பழைய பாணியில் செயல்படுவது இன்றைய தேவையை ப+ர்த்தி செய்ய உதவாது என்பதை உணர்ந்து புதிய, புதிய விஷயங்களைக் கற்றறிவதில் அக்கறையும் ஆர்வமும் உடையவராக இருக்க வேண்டும்.

கற்பனைத் திறனும், நாளை என்ன நடக்கும் என்பதை முன் கூட்டியே உணர்ந்து செயல்படும் தொலைநோக்குப் பார்வையும் வேண்டும். அப்பொழுதுதான் எதிர்வரவுள்ள ஆபத்துக்களை முன் உணர்ந்து சங்க அமைப்பைச் சரியான திசை வழியில் நடத்திச் செல்ல முடியும். இல்லையெனில் "மோதி நிற்கும் கப்பல்" நிலைக்கு அவரும் போய்விடுவார். சங்கமும் போய் நிற்கும்.

சரியாக ஆராயும் திறனும், சரியான தீர்ப்பைச் சொல்லும் திறனும் தேவை. அதுதான் சங்கத்தின் முன் வரும் பிரச்சினைகளை தீர்க்க உதவும்.

மகிழ்வூட்டும் மனோ நிலையுடன் செயல்பட்டு மற்றவர்களையும், கவ்வி பிடிக்கச்செய்யும் திறமை தேவை. அப்பொழுதுதான் பிரச்சினைகளின் காரணமாக வரும் இறுக்கம் தளரும். பரஸ்பர உறவும் நெருக்கமும் அதிகரிக்கும்.

சங்கத் தலைமைப் பொறுப்புகளுக்கு வருவது ஒருவருடைய உரிமை. ஆனால், அவை நம்முடைய தகுதி, தேவைகளுக்கேற்ப பலரால் வழங்கப்படும் தற்காலிக ஏற்பாடுகள்தான் என்பதில் தெளிவு வேண்டும். பதவிகளைத் தேடி ஓடவும் கூடாது. தேடிவரும் பதவிகளை ஏற்பதில் தயக்கமும் கூடாது. பதவிகளை அடைய அல்லது தொடர எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நிலைக்கும் நாம் போய்விடக்கூடாது.

மேற்கண்ட தலைமைப் பண்புகளுக்கான விஷயங்களை எனக்கு தெரிந்த, என்னால் கேட்டு, கற்றறிந்த வகையில் தெரிவித்துள்ளேன். இதன் மீது மேலும் பல ஆய்வுகளை செய்து, அதன்மீது நடைமுறை யுத்திகளை கடைபிடித்து அதிலிருந்து கிடைக்கும் அற்புதங்களே தலைமை பண்புகளை மிளிரச்செய்யும் சாகசங்களாகும். ●

**Finance (BPE) Department,**
**Fort St. George, Secretariat,**
**Chennai – 600 009**

**NP**

**Letter No.111/Finance (BPE)/2025, dated 28.07.2025**

From
Thiru.T.Udhayachandran, I.A.S.,
Principal Secretary to Government

To
The Chief Executive Officers of all State Public Sector Undertakings/ Statutory Boards (w.e)

Sir/Madam,

**Sub :** Restoration of the system of periodical surrender of Earned Leave for encashment to the employees - orders - issued.

**Ref :**
1. Govt. Letter No.15211/Finance (BPE)/ 2020, dated:27.4.2020
2. Govt. Letter No.21996/Finance (BPE)/ 2021, dated:18.5.2021
3. Govt. Letter No.20148/Finance (BPE)/ 2022, dated:30.4.2022
4. Govt. Letter No.38307/Finance (BPE)/ 2022-1, dated:18.8.2022
5. G.O.Ms.No.35, HRM Department, dated:30.6.2025

*****

In continuation of the Government Letters cited in references 1st and 4th above, I am directed to enclose a copy of Government Order referred to in reference 5th cited, wherein the following orders have been issued: (a) The system of surrender of Earned Leave for encashment shall be restored with effect from 1.10.2025; (b) Government employees and teachers shall be permitted encashment of 15 days of Earned leave per year, in accordance with their regular annual cycle and the due dates that were applicable prior to the suspension of this facility on 27.4.2020.The above orders may be adopted and implemented without any deviation in respect of employees whose service rules provide for the sanction of Earned Leave similar to that of Government employees. It is also clarified that encashment of Earned Leave should not be introduced as a new scheme in organizations where such provision does not already exist.

2) This letter may be placed before the Board of Directors at the ensuing Board meeting for information and necessary action.

Yours faithfully,

for Principal Secretary to Government.

Copy to:

The Additional Chief Secretaries/ Principal Secretaries/ Secretaries to Government of all Administrative departments of Secretariat, Chennai- 09.

## ABSTRACT

Fundamental Rules - Tamil Nadu Leave Rules, 1933 – Restoring the System of Periodical Surrender of Earned Leave for encashment to the Government Employees and Teachers - Orders - Issued.

---

## HUMAN RESOURCES MANAGEMENT (FR-III) DEPARTMENT

**G.O. (Ms.) No.35**

**Dated: 30.06.2025**
**விசுவாவசு, ஆனி - 16**
**திருவள்ளுவர் ஆண்டு - 2056**

**Read:**

1. G.O.(Ms).No.48, Personnel and Administrative Reforms (FR-III) Department, dated 27.04.2020.
2. G.O.(Ms).No.48, Personnel and Administrative Reforms (FR-III) Department, dated 13.05.2021
3. G.O.(Ms).No.36, Human Resources Management (FR-III) Department, dated 11.04.2022.

*****

**ORDER:**

In the Government Order first read above, orders were issued for suspending the periodical surrender of Earned Leave for encashment for 15 days every year / 30 days every two years initially for a period of one year with effect from 27.04.2020. In the Government Order second read above, orders were issued extending the suspension of facility of surrender of Earned Leave for encashment for one more year till 31.03.2022. Subsequently, in the Government Order third read above, the suspension of facility of surrender of Earned Leave for encashment has been extended until further orders.

2. The Hon'ble Chief Minister has made the following announcement on the floor of Tamil Nadu Legislative Assembly under rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules on 28.04.2025:-

> கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திலே, அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெரும் சுமையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களுக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறையை, 01.04.2026 முதல், 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் வகையில் மீண்டும் செயல்படுத்திட 2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இருந்தாலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை, இந்த ஆண்டே செயல்படுத்திட கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.
>
> அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாட்களில், 15 நாட்கள் வரை 01.10.2025 முதல் சரண் செய்து பணப்பயன் பெறலாம்."

3. Based on the above announcement made by the Hon'ble Chief Minister, the Government issue the following orders:-

(i) the Earned Leave surrender system be restored with effect from 01.10.2025;

(ii) the encashment of Earned Leave for 15 days in a year be allowed to Government Employees and Teachers as per their regular annual cycle according to the due date prior to the suspension of the facility on 27.04.2020;

[P.T.O.]

(iii) the Government Employees who have joined service between the period from 27.04.2020 to 30.09.2025, if otherwise eligible, are allowed to encash by surrendering the earned leave for 15 days from the first day of the quarter in which they have joined as per the schedule given below:-

| **Joining in Government service in between 27.04.2020 and 30.09.2025** | **Eligible from** |
|---|---|
| October, November, December | 01.10.2025 |
| January, February, March | 01.01.2026 |
| April, May, June | 01.04.2026 |
| July, August, September | 01.07.2026 |

4. It is clarified that if a Government Servant had surrendered the Earned Leave for encashment for 15 days on 01st April, 2020, he/she will be eligible to avail this facility on 01st April, 2026 and if he/she had surrendered it on 15th October, 2019, he/she will be eligible to avail this facility on 15th October 2025.

5. This order is also be applicable to all Constitutional/Statutory Bodies including all State Corporations/ Local Bodies/ Boards/ Universities/ Commissions/ Companies/ Institutions/Societies, etc.

6. Necessary amendment to Rule 7A of the Tamil Nadu Leave Rules, 1933 in this regard will be issued separately.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
All Secretaries to Government, Secretariat, Chennai – 600 009.
All Departments of Secretariat, Chennai – 600 009.
All Heads of Department.
All District Collectors / District Judges / District Magistrates.
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai – 600 003.
The Registrar General, High Court of Madras, Chennai – 600 104.
The Registrar, Madurai Bench of Madras High Court, Madurai.
All Constitutional/Statutory Bodies including all State Corporations/ Local Bodies/ Boards/ Universities/ Commissions/ Companies/ Institutions/ Societies etc.
The Accountant General, Chennai – 600 018.
The Commissioner of Treasuries and Accounts, Chennai – 600 035.
All Pay and Accounts Officers / Treasury Officers.
The Human Resources Management (AR) Department, Secretariat, Chennai – 600 009. (to Publish in the Government website www.tn.gov.in / intranet)
The Human Resources Management (FR I) Department, Secretariat, Chennai–600 009 (with a request to issue an amendment in the Tamil Nadu Fundamental Rules)

Copy to:
The Secretary-II to Hon'ble Chief Minister, Secretariat, Chennai – 600 009.
The Special Personal Assistant to Hon'ble Minister (Finance and Environment Climate Change), Secretariat, Chennai – 600 009.
The Special Personal Assistant to Hon'ble Minister (Human Resources Management), Secretariat, Chennai – 600 009.
The Senior Principal Private Secretary to Chief Secretary to Government, Secretariat, Chennai- 600 009.
The Senior Principal Private Secretary to Principal Secretary to Government, Finance Department, Secretariat, Chennai – 600 009.
The Private Secretary to Secretary to Government, Human Resources Management Department, Secretariat, Chennai – 600 009.
All Sections / All Officers in Human Resources Management Department, Secretariat, Chennai – 600 009.
Stock File / Spare Copy.

**// FORWARDED BY ORDER //**

30/06/2025
SECTION OFFICER
30/6/2025

வெ.வசந்தி தேவி

# முன்னோடித் துணைவேந்தர்

**நா.மணி**



திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பேராசிரியர் வசந்தி தேவி 1992இல் துணைவேந்தர் ஆனார். அறத்தை நோக்கிய பயணமும், தைரியமும், சமூகத்தின் மீதிருந்த அன்பும்தான் அவர் பணியிலிருந்த ஆறாண்டுக் காலத்தில் செயற்கரிய செயல்களைச் செய்ய வைத்தது. அங்கு அவர் மேற்கொண்ட முக்கியப் பணிகளில் சிலவற்றை, பேராசிரியர் வ.பொன்னுராஜ் பகிர்ந்து கொண்டார்.

**கல்வி முன்னோடி**

இன்றைக்கு பொதுத் தேர்வு முடிவுகள் வெளிவந்தவுடன் தேர்வு எழுதிய மாணர்வர்கள் விடைத்தாள் நகல் கேட்பது, மறுமதிப்பீட்டு விண்ணப்பம் செய்வது, முந்தைய மதிப்பீடு சரியில்லை என்றால் அதிக மதிப்பெண் பெறுவதும் இயல்பாக நடக்கின்றன. இதற்கான முன்னோடி வசந்தி தேவி. அவர்தான் இந்த முறையை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்தார். ஆசிரியர்களின் முழு ஒப்புதலோடு இந்த மாற்றத்தைக் கொண்டுவந்தார்.

1990ஆம் ஆண்டில் கல்லூரிகளில் வாங்கும் கட்டாய நன்கொடையைத் தடைசெய்யும் சட்டம் வந்தது. என்ற போதும் புகார்கள் வந்த கல்லூரிகள் மீது பல்கலைக்கழக அளவில் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று சிந்தித்துச் செயலாற்றினார். அத்தகைய கல்லூரிகளுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு வேறு எந்தப் பாடப் பிரிவும் தொடங்க அனுமதி மறுத்தார். கல்லூரிப் படிப்பைத்தவிர இளைஞர் நலத்துறை மூலமாக மாணவர்களின் பன்முக ஆற்றலை வளர்க்கப் பல திட்டங்கள் திட்டமிடப்பட்டன. இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் வெற்றிபெற மாணவர்களுக்கு இலவச பயிற்சி மையம் ஒன்றைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கினார். இத்தகைய பணிகளை நிறைவேற்றப் பேராசிரியர் ச.மாடசாமி போன்றவர்களைக் கல்லூரிகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு அழைத்து வந்தார். அந்தக் காலத்தில் ஒரு பல்கலைக்கழகம் தனித்து புத்தகத் திருவிழாவை நடத்த முடியும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இரண்டாவது முறை துணைவேந்தரானபோது பல்கலைக்கழகத்தில் புத்தகத் திருவிழாவைத் தொடங்கி வைத்தார். பல்கலைக்கழகத்தில் கட்டிடங்கள் கட்டக் கிடைத்த இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் லஞ்ச ஊழல் இல்லை என்று எல்லாருக்கும் அறியும் வண்ணம் அதைக் கட்டி முடித்தார்.

**மாணவர்களின் துணைவேந்தர்**

பேராசிரியர் வசந்தி தேவி எப்போதும் மாணவர் மையத் துணைவேந்தராக விளங்கினார். உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவர் பேரவைத் தேர்தலை நடத்த உத்தரவிட்டார். ஆண்கள் மட்டுமே படித்துக் கொண்டிருந்த கல்லூரிகள் பலவற்றை இருபாலர் பயிலும் கல்லூரிகளாக மாற்றினார். மாணவர் குறைதீர்ப்பு குழுக்களை அனைத்துக் கல்லூரிகளிலும் உருவாக்கினார். தேர்வு காலத்தில் பல்கலைக்கழத்தின் சார்பாக மாநில, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற மாணவ மாணவியருக்குச் சிறப்புத் தேர்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

பணிநீக்கம் காரணமாகப் பல்கலைக்கழகத்தின் தற்காலிகப் பணியாளர்கள் போராடிக் கொண்டிருந்தபோது துணைவேந்தராகப் பொறுப்பு ஏற்றதும் அவர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்தார். வசந்தி தேவி பணியாற்றிய ஆறாண்டு காலமும் பேராசிரியர்கள் சங்கத்தோடு (MUTA) இணைந்தே பணியாற்றினார். அவர்களுடைய ஒப்புதலோடு எல்லாப் பணிகளையும் முன்னெடுத்தார். இரண்டாவது முறையும் துணைவேந்தராகி தன்னால் இயன்ற சேவைகளைச் செய்தார். ஒருவர் ஒரு பல்கலைக்கழகத்தில். தொடர்ந்து இரண்டு முறை மட்டுமே துணைவேந்தராக இருக்க முடியும் என்பது பல்கலைக்கழகத்தின் விதி. ●

கட்டுரை

# டி.எல்...
# இணையிலா ஈரெழுத்துச் சொல்

– பெரணமல்லூர் சேகரன்



டி.எல். என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் தோழர் தே. லட்சுமணன்.தோழர் தே லட்சுமணன் தாம் அரசுப் பணியில் இருக்கும்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கப் பாடுபட்டவர். அவர் பணி புரிந்த கால்நடைத்துறையில் தமிழ் நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தை உருவாக்கி மாநிலப் பொதுச்செயலாளராக செயல்பட்டவர். தமது அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வில் சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராக பணியாற்றினார். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர், மாநில செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றினார்.

மாற்றுத் திறனாளிகளுக்காக, சிறுபான்மை மக்களுக்காக, சமூக மாற்றத்திற்காக தனது இறுதி மூச்சுவரை உழைத்துக் கொண்டிருந்தார். எந்நேரமும் ஏழை, எளிய பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகள் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார். அனைத்து நூல்களையும் தேடித் தேடி படிப்பார். வரலாற்று நிகழ்வுகளை அவருடன் இருக்கும் நபரிடம் சுருக்கமாக புரியும்படி எடுத்துரைப்பார்.

அவர் செங்கல்பட்டில் பாரதி மன்றத்தை உருவாக்கி அதன் ஆலோசகராக இருந்து முற்போக்குக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றவர். இந்த பள்ளியில் இலவசமாக ஏழை, எளிய பிரிவினருக்காக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய 250க்கும் மேற்பட்ட சிறப்பு பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அதற்கும் தலைவராக இருந்து திறம்பட செயல் பட்டவர். இன்று மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் 1,500 ரூபாய் உதவித் தொகை பெறுகிறார்கள் என்றால் அதற்கு காரணம் தோழர் டி.எல். தான். தற்போது 4 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் அந்த உதவித் தொகையை பெற்று பயன் பெறுகிறார்கள். இவர் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் கொரோனா நுண்மிக்குப் பலியானார்.

ஆகஸ்ட் 24: தோழர் தே.லட்சுமணன் நினைவு நாள்.

Printed and Published by M.Srinivasan on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com